

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (1.1.2026) ஆங்கிலப் புத்தாண்டு தினத்தையொட்டி சென்னை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, சட்டமன்ற உறுப்பினர் வி. ஜி. ராஜேந்திரன் ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (1.1.2026) ஆங்கிலப் புத்தாண்டு தினத்தையொட்டி சென்னை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி ராஜேந்திரன் ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (2.1.2026) மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக பொதுச் செயலாளர் வைகோ அவர்கள் தலைமையில் நடைபெறும் சமத்துவ நடைப்பயணத் தொடக்க விழாவில் கலந்து கொள்வதற்காக திருச்சிராப்பள்ளிக்கு வருகை தந்த போது, பெருந்திரளான பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

ஆ.தாமஸ் ஆல்வா எடிசன் தலைமை! மரியசார்லஸ், டயானா ஷர்மிளா பங்கேற்பு!

## கீழையூர் கிழக்கு ஒன்றியக் கழக அலுவலகம், வேளாங்கண்ணி பேரூர்க் கழக அலுவலகம் திறப்பு விழா!

### மாவட்டக் கழகச் செயலாளர் என். கௌதமன் திறந்து வைத்தார்!

நாகை, ஜன. 3 -

நாகை மாவட்டம் கீழையூர் கிழக்கு ஒன்றியக் கழக அலுவலகம் மற்றும் வேளாங்கண்ணி பேரூர் கழக அலுவலகம் திறப்பு விழா வேளாங்கண்ணியில் நடைபெற்றது. விழாவிற்கு கீழையூர் கிழக்கு ஒன்றியக் கழக செயலாளர் ஆ.தாமஸ் ஆல்வாஎடிசன் தலைமை தாங்கினார்.

வேளாங்கண்ணி பேரூராட்சி தலைவர் டயானா ஷர்மிளா, பொதுக்குழு உறுப்பினர் எஸ்.பி.டி.சார்லஸ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வேளாங்கண்ணி பேரூர்க் கழகச் செயலாளர் மரிய சார்லஸ் வரவேற்றார்.

விழாவில் நாகை மாவட்டக் கழக செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவருமான என்.கௌதமன் கலந்து கொண்டு ஒன்றிய, பேரூர் கழக அலுவலகத்தை திறந்து வைத்தார். விழாவில் மாவட்டக் கழக பிரதிநிதிகள் ஞானசேகரன், இராம.இளம்பரிதி, நரசிம்மன், மாரிமுத்து, சார்லஸ், ஒன்றிய கழக நிர்வாகிகள் சுப்பிரமணியன், அருள்செந்தில், ரவி, பூவை ஆர்.ஜி.முருகு, அனுசியாஜோதிபாசு, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் ரெக்ஸ், ஒன்றிய பிரதிநிதி கந்தையன், வேளாங்கண்ணி பேரூர் சிறுபான்மையினர் அணி அமைப்பாளர் ஸ்டாலின், ஒன்றிய வர்த்தக அணி அமைப்பாளர் மு.ப.செல்வம், வேளாங்கண்ணி பேரூர் பொருளாளர் ஏ.ஆர்.ராஜா, பேரூர்க் கழக துணைச் செயலாளர் கலையரசன், ரகமதுல்லா, நிக்சன், வெற்றிவேல், புகழேந்திரன், ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்கள் கார்க்கின், புலிகேசி, ராகவன், டெரிக், பாசில், ஒன்றிய விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ராஜசெல்வம், மதன், ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் நிர்மல் குமார் மற்றும் கிளை, வர்டு கழக செயலாளர்கள், நிர்வாகிகள், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாட்டில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக நேற்று (2.1.2026) வருகை தந்த இந்திய குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் அவர்களை, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னை விமான நிலையத்தில் பூங்கொத்து கொடுத்து வரவேற்றார். இந்நிகழ்வில் தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி, ஒன்றிய தகவல் ஒலிபரப்புத்துறை மற்றும் நாடாளுமன்ற விவகாரத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

டெல்டா மண்டலத்திற்குட்பட்ட

## மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம்!

### கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு அறிவிப்பு!



முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றிட வருகிற 19.01.2026 திங்கட்கிழமை, மாலை 4.00 மணி அளவில், தஞ்சாவூர் மாவட்டம், செங்கிப்பட்டியில் நடைபெற உள்ள “வெல்லும் தமிழ்ப் பெண்கள்” தி.மு.க. டெல்டா மண்டல மகளிர் அணி மாநாடு குறித்து கலந்தாலோசிக்க, “டெல்டா மண்டலத்திற்குட்பட்ட மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம்” எனது தலைமையில் 03.01.2026 சனிக்கிழமை, காலை 10.00 மணியளவில் தஞ்சாவூர், மகாராஜா மகாலில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் டெல்டா மண்டலத்திற்குட்பட்ட திருச்சி வடக்கு, திருச்சி தெற்கு, திருச்சி மத்திய, தஞ்சை வடக்கு, தஞ்சை தெற்கு, தஞ்சை மத்திய, அரியலூர், பெரம்பலூர், கடலூர் கிழக்கு, கடலூர் மேற்கு, மயிலாடுதுறை, நாகை, திருவாரூர், புதுக்கோட்டை வடக்கு, புதுக்கோட்டை தெற்கு ஆகிய மாவட்டக் கழகச் செயலாளர்/ பொறுப்பாளர்கள், மாண்புமிகு அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் - ஒன்றிய, நகர, பகுதி, பேரூர்க் கழகச் செயலாளர்கள் ஆகியோர் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**கே.என். நேரு**
**முதன்மைச் செயலாளர்,**
**தி.மு.க.**



விளாத்திகுளம் அரசு மேல்நிலைப்பள்ளி மைதானத்தில் முன்னாள் மாணவர்கள், வாக்கிங் நண்பர்கள்,பாய்ஸ் கிளிப் சார்பில் நடைபெற்ற முதலாம் ஆண்டு கபாடிப் போட்டியினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி.மார்க்கண்டேயன் துவக்கி வைத்தார். நிகழ்வில் ஒன்றியச் செயலாளர்கள் ராமசுப்பு, சின்னமாரிமுத்து, அன்புராஜன், ராதாகிருஷ்ணன், செல்வராஜ் மும்மூர்த்தி, உள்ளிட்ட கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



திருப்பத்தூர் மாவட்டம், ஆலங்காயம் மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் எ.வ.வேலு, மாவட்டச் செயலாளர் க.தேவராஜ் எம்.எல்.ஏ. ஆகியோர் வழிகாட்டுதலின்படி, 15,000 பேருக்கு சமபந்தி விருந்து கழக வேட்டி, புத்தாண்டு காலண்டர், அறுசுவை அசைவ விருந்து ஒன்றியச் செயலாளர் வி.எஸ்.ஞானவேலன் ஏற்பாட்டில் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் அசோகன், பெருமாள், ஞானசேகரன், ராமநாதன், தசரதன், குமார், வெங்கடேசன், சிவகுமார் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்